## திருத்துறைப்பூண்டி நகராட்சி

## இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 29.07.2022 வெள்ளிக் கிழமை நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திருமதி.பா.கவிதா, எம்.காம்.,<br>தலைவர்,<br>திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்**

<table>
<tr><th rowspan="2">பொருள் எண்</th><th rowspan="2">பொருள்கள் விபரம்</th><th colspan="2">நகர்மன்றத் தீர்மானம்</th></tr>
<tr><th>தீர்மானம் எண்</th><th>விபரம்</th></tr>
<tr><td>1</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2021-2022-ன்கீழ் வார்டு எண்.16 பள்ளிவாசல் தெரு தார்சாலை அமைக்கும் பணி ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 09.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.எஸ்.ஞானசுந்தரம்</td><td rowspan="2">440215.42</td><td>443869.19</td><td>0.82சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திருமதி.எஸ்.விஜயகுமாரி</td><td>439784.50</td><td>0.09சதவீதம் குறைவு</td></tr>
</table></td><td>74</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br><br>**1.** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.09 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.விஜயகுமாரி என்ற ஒப்பந்த தாரரின் ஒப்பந்தப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.<br><br>**2.** நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய அலுவலக நடைமுறையை மன்றம் ஏற்கலாம்.<br>**(ந.க.எண் 594-1/2022/இ1)** | | |
| **2** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் குடிநீர் விநியோகம் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து நாள் ஒன்றுக்கு 1.80 MLD பெறப்பட்டு 10 வெவ்வேறு இடத்திலிருக்கும் மேல்நிலை தொட்டிகளில் ஏற்றப்பட்டு 40 கி.மீ.நீளமுள்ள D-Line மூலம் 2838 எண்ணிக்கையிலான இணைப்புகளுக்கு தினசரி குடிநீர் வழங்கப்படுகிறது. 17 எண்ணிக்கையிலான மினி பவர் பம்ப், 144 எண்ணிக்கையிலான பொதுக் குழாய்கள், 51 எண்ணிக்கையிலான கைப்பம்புகள், இரண்டு Open Wall மற்றும் 5 கைப் பம்புகள் போன்றவை தினசரி இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றுக்கு ஓர் பம்ப் மெக்கானிக் மட்டும் உள்ளார். மேற்காணும் குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணிக்கு ஆட்கள் இல்லாத காரணத்தால் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் மூலம் தயார் செய்யப்பட்ட பராமரிப்பு பணிக்கு Out Sourcing முறையில் ஆள் எடுக்க காலதாமதம் ஆகும் சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.5391/2005/எப்1 நாள் 28.01.2005ன்படி Water Source Distribution பணிக்கு நான்கு நபர்கள் முற்றிலும் தற்காலிகமாக Out Sourcing முறையில் PWD Schedule Rate–ன்படி ஒப்பந்த அடிப்படையில் ஆறுமாத காலத்திற்கு கீழ்க்காணும் விவரப்படி உத்தேச செலவினம் ரூ.600000/-இலட்சத்திற்கும் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. | **75** | **அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br><br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**2.** அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட அலுவலக நடைமுறையை மன்றம் ஏற்கலாம்.<br>**(ந.க.எண்.1994 /2022/இ1)** | | |
| **3** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகளை மேற்பார்வையிட பணி ஆய்வர் பணி இடம் இல்லை. மேலும், பொதுப்பணி மேற்பார்வையாளரும் தற்சமயம் பணி மாறுதலில் சென்றுள்ளதால் நடைபெற்று வரும் பணிகளை மேற்பார்வையிட இயலவில்லை.<br><br>மேலும் அவ்வப்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் தஞ்சாவூர் ஆகிய உயர் அலுவலர்களிமிருந்து அவ்வப்போது கோரப்படும் அறிக்கைகள், புள்ளி விவரங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு போதிய பணியாளர்கள் இல்லை.<br><br>மேலும் தற்பொழுது இந்நகராட்சியில் நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை மேற்பார்வையிடவும், அறிக்கைகள் தயார் செய்யவும் தொழில் நுட்ப பணியாளர்கள் தேவைப்படுகிறது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதி தொழில்நுட்ப உதவியாளர் 3 நபர்களும் கணிணி இயக்குபவர் 1 நபரும் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக PWD (Schedule of Rate) 2021-2022–ல் வரையறுக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5391/2005/எப்3 நாள் 28.01.2005ன்படி வழங்கப்பட்ட வழிகாட்டுதலின்படி ஆறு மாத காலத்திற்கு முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க அனுமதிக்கும், அடுத்து வருகிற ஆறு மாத காலத்திற்கு முற்றிலும் தற்காலிகமாக Contract Basic அடிப்படையில் அதற்குரிய EPF தொகையுடன் நியமித்து கொள்ளவும், ஆறு மாத உத்தேச மதிப்பீடு தொகை ரூ.700000/-த்திற்கும் நிர்வாக அனுமதி | **76** | **அனுமதிக்கப் பட்டது** |

<table>
<tr><td></td><td>வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட அலுவலக நடைமுறையை மன்றம் ஏற்கலாம்.<br><u>(ந.க.எண்.1994 /2022/இ1)</u></td><td></td><td></td></tr>
<tr><td>4</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொது நிதி 2022-2023-ன்கீழ் குடிநீர் பணியாளர் 4 நபர்கள் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்திட ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 22.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.வ.திருமலைவாசன்</td><td rowspan="2">ரூ.600000/-</td><td>ரூ.505440/-</td><td>15.76 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/S.மங்கையர்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்</td><td>ரூ.684000/-</td><td>14.00 சதவீதம் அதிகம்</td></tr>
</table></td><td>77</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
அலுவலக குறிப்பு:
<ol>
<li>வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 15.76 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.வ.திருமலைவாசன் என்ற ஒப்பந்த தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.</li>
</ol>
<u>ந.க.எண்.1994/2022/இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>5</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொதுநிதி 2022-2023-ன்கீழ் பொறியியல் பிரிவில் தொழில் நுட்ப பணியாளர் 3 நபர்கள் மற்றும் கணிணி இயக்குபவர் 1 நபர் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்திட ரூ.7.00இலட்சம் மதிப்பீட்டில் திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு 22.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.ப.குணவசந்தன்</td><td rowspan="2">ரூ.700000.00</td><td>ரூ .687060.00</td><td>1.84 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/S.மங்கையர்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்</td><td>ரூ.727200.00</td><td>3.88 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
</td>
<td>78</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட1.84 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.ப.குணவசந்தன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண் 1994/2022/இ1)**

</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>6</td>
<td>

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2021-2022-ன்கீழ் வார்டு எண்.20 ரொக்கக் குத்தகை தோப்பு தார்சாலை அமைக்கும் பணி ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு19.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.பி.கண்ணன்</td><td rowspan="2">ரூ.934837.00</td><td>ரூ.933529.00</td><td>0.14சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/S.மங்கையர்க்கரசிகன்ஸ்ட்ரக்ஷன்ஸ்</td><td>ரூ.941729.00</td><td>0.74சதவீதம் அதிகம்</td></tr>
</table>

</td>
<td>79</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>அலுவலக குறிப்பு:<br>1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.14 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.பி.கண்ணன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br><br><u>ந.க.எண்.594-1/2022,இ1</u></td><td></td><td></td></tr>
<tr><td>7</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2021-2022-ன்கீழ் வார்டு எண்.23 அண்ணா நகர் கோன்றிக் குளத்தில் படித்துறை அமைக்கும் பணி ரூ.3.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 19.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr><tr><td>1</td><td>திரு.எஸ்.ஞானசுந்தரம்</td><td rowspan="2">261990/-</td><td>261910/-</td><td>0.03சதவீதம் குறைவு</td></tr><tr><td>2</td><td>M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்</td><td>262923/-</td><td>0.35சதவீதம் அதிகம்</td></tr></table></td><td>80</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.03 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.ஞானசுந்தரம் என்ற ஒப்பந்த தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய அலுவலக நடைமுறையை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.594/2022,இ1

</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>**8**</td>
<td>

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2021-2022-ன்கீழ் வார்டு எண்.21 பெரியசிங்களாந்தி நடுத்தெரு தார்சாலை அமைக்கும் பணி ரூ.4.65இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 19.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.எஸ்.ஞானசுந்தரம்</td><td rowspan="2">392795.00</td><td>392714.00</td><td>0.02 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்</td><td>394196.00</td><td>0.35 சதவீதம் அதிகம்</td></tr>
</table>

</td>
<td>**81**</td>
<td>**அனுமதிக்கப் பட்டது**</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br>**1.** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.ஞானசுந்தரம் என்ற ஒப்பந்த தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம்ஏற்கலாம்.<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய அலுவலக நடைமுறையை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.594/2022,இ1 | | |
| **9** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர் இணைய வழி (Video Conference) ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு போதிய கணிணி உள்ளிட்ட உபகரணங்கள் போதிய அளவில் இல்லை. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் ஆகியோரின் ஆய்வுக்கூட்டத்தில் இனிவரும் காலங்களில் அடிக்கடி இணையவழி ஆய்வுக் கூட்டம் நடைபெற உள்ளதால் அதற்கு தேவையான High hand Infrastructure அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்கு ஆணையர் மற்றும் பொறியாளர் அறைக்கு All in One Computer 24” With HD Camera Wifi and High Quality Speaker Core i5 Configuration உடைய அனைத்து வசதிகளுடன் கூடிய கணிணி 2 எண்ணிக்கையில் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.80இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. | **82** | **அனுமதிக்கப் பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>
அலுவலக குறிப்பு:
1. பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக் கலாம்.
<u>ந.க.எண்.1776/2022/இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>10</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொது நிதி 2022-2023-ன்கீழ் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அறைக்கு All In One Computer 24” With HD Camera Wi-fi and High Quality Speaker Core i5 Configuration உடைய அனைத்து வசதிகளுடன் கூடிய கணிணி 2 எண்ணிக்கையில் வாங்கும் பணி ரூ.1.80இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 19.07.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>New Orange Computers, Kumbakonam</td><td rowspan="3">ரூ.180000/-</td><td>91200.00</td><td>49.33 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>New Digital Solutions, Kumbakonam</td><td>90100.00</td><td>49.94 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>3</td><td>VR Computers, Kumbakonam</td><td>89000.00</td><td>50.55 சதவீதம் குறைவு</td></tr>
</table>
</td>
<td>83</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br>**1.** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 50.55சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள VR Computers, Kumbakonam என்ற ஒப்பந்த தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற் கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண்.1776/2022/இ1 | | |
| **11** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய உணவு விடுதி எண்.01-ன் குத்தகை உரிமத்தை 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் குத்தகைதாரர் திரு.வை.முருகேசன் த/பெ. வைத்திலிங்கம், ஆஸ்பத்திரி தெரு, திருத்துறைப்பூண்டி என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார். இந்நிலையில் 2021-2022 ஆம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ.362700/-ஐ செலுத்தக்கோரி அறிவிப்பு கடிதங்கள் அனுப்பப்பட்டதில் தனக்கு உடல்நிலை அடிக்கடி சரியில்லாமல் உள்ளதாலும், கடையினை சரிவர நடத்த முடியவில்லை என்பதாலும் உணவு விடுதிக்கு தான் செலுத்திய முன்வைப்புத் தொகைகளை உளவடை செய்து கொண்டு மீதித் தொகைகளை 30.03.2022 ஆம் தேதிக்குள் செலுத்தி விடுவதாக 25.03.2022 ஆம் தேதிய அன்னாரது கடிதத்தில் உறுதியளித்து அன்றைய தினமே குத்தகைதாரரால் மேற்படி கடையினை காலி செய்து விட்டார். அன்னாரின் கடிதத்தினை ஏற்று அவரது இருப்பில் உள்ள வைப்புத் தொகை ரூ. 228201/-யை 30.03.2022 ஆம் தேதியில் உளவடை செய்யப்பட்டு மீதித் தொகை ரூ.134499/-யை செலுத்தக்கோரி அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது. | **84** | **அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | ஆனால் அன்னாரால் தொகை ஏதும் செலுத்தப்படாத நிலையில் குத்தகைதாரர் 29.06.2022 ஆம் தேதியன்று இறந்து விட்டார். 2021-22 ஆம் ஆண்டிற்கு குத்தகைதாரர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 134499/-யை அன்னாரது வாரிசுதாரர்களிடமிருந்து சட்ட ரீதியான முறையில் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும், அன்னாரின் உரிமத்தை ரத்து செய்து 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான கேட்பு பட்டியலில் நீக்கம் செய்வதற்கும், உண்வு விடுதியின் கட்டிடம் மிகவும் பழுந்தடைந்து பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்க கூடிய இருப்பதால் பொதுமக்களின் நலன் கருதி உணவு விடுதிக்கான ஏல நடவடிக்கைகளை கைவிடவும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**<u>ந.க.எண்.1476/2017/அ2</u>** | | |
| **12** | இந்நகராட்சி அலுவலகத்தில் பிறப்பு சான்று திருத்தம் தொடர்பாக நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முறையீடு செய்து, நகராட்சியின் சார்பாக வாதியின் வழக்கினை திருப்பிட வாதிட்ட அரசு வழக்கறிஞர் திரு.எஸ். சிவகுருநாதன், பி.காம்.,பிஎல்., அவர்களுக்கு (Return of Plant) மனு தயார் செய்யப்பட்டது. அதற்கான தொகை ரூ.5000/- வழங்கிட மன்ற பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்.<br>**2.** இந்நகராட்சியின் சார்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்குரையை திருப்பிட மனு தயார் செய்யப்பட்ட தொகையினை வழங்கிடலாம்.<br><u>ந.க.எண். /2022/எச்1</u> | **85** | **அனுமதிக்கப் பட்டது** |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>13</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவிற்கு நகர் பகுதியினை திடக்கழிவு மேலாண்மை பணிகள் மூலம் மேற்கொள்ள சுகாதார பொருட்கள் கையிருப்பு இல்லாத காரணத்தினால் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-28 அவர்களின் அலுவலகத்திலிருந்து வரப்பட்டுள்ள செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.9514/2022/தூ.இ.தி.2 நாள் 08.06.2022 விலை விகிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுசுகாதாரப் பிரிவு தளவாட பொருட்கள் கீழ்க்கண்டுள்ளவாறு;<br>
<table>
<tr><td>வ.எண்.</td><td>பொருட்களின் பெயர்</td><td>தேவையான அளவு</td></tr>
<tr><td>1.</td><td>குப்பைகளை கட்டுவதற்கு சாக்கு</td><td>3000 எண்ணிக்கை</td></tr>
<tr><td>2.</td><td>அபேட்</td><td>40 லிட்டர்</td></tr>
<tr><td>3.</td><td>பைத்திரியம்</td><td>40 லிட்டர்</td></tr>
<tr><td>4.</td><td>சிறிய எடைப்பார்க்கும் இயந்திரம்</td><td>5 எண்ணிக்கை</td></tr>
<tr><td>5.</td><td>Reflective Jacket</td><td>100 எண்ணிக்கை</td></tr>
<tr><td>6.</td><td>Glouse</td><td>100 எண்ணிக்கை</td></tr>
<tr><td>7.</td><td>உரம் சலிக்கும் சல்லடை</td><td>3 எண்ணிக்கை</td></tr>
</table>
மேற்படி வாங்கும் பொருட்களுக்கு உத்சே செலவுத் தொகை மதிப்பு ரூ.2,50,000/-க்கு மன்றப்பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>
அலுவலக குறிப்பு:<br>
1. அனுமதிக்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று</td><td>86</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன்கீழ் தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கை யினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><br>2. அரசு நிர்ணயம் செய்துள்ள விலை விகிதப்படி பொதுசுகாதாரம் நோய் தடுப்பு பணி பொருட்கள் வாங்கிடலாம்.<br>ந.க.எண்.1648/2022/எச்1</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>14</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவிற்கு நகர் பகுதியினை திடக்கழிவு மேலாண்மை பணிகள் மூலம் மேற்கொள்ள தளவாடப் பொருட்கள் கையிருப்பு இல்லாத காரணத்தினால் 22.07.2022-ல் இரண்டு டெண்டர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th rowspan="3">வ.எ.</th><th rowspan="3">நிறுவனத்தின் பெயர்</th><th colspan="7">ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><th>சாக்கு</th><th>அபேட்</th><th>பைத்தி ரியம்</th><th>தராசு</th><th>பிரதி பலிப்பு ஜாக் கெட்</th><th>கை யுறை</th><th>உரம் சலிக் கும் சல்ல டை</th></tr>
<tr><th>ரூ.</th><th>ரூ.</th><th>ரூ.</th><th>ரூ.</th><th>ரூ.</th><th>ரூ.</th><th>ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>திருமலை டிரேடர்ஸ், FF3.ரெங்கா காம்ளக்ஸ், ரம்பா தியேட்டர் அருகில், திருச்சி-2.</td><td>20</td><td>625</td><td>1100</td><td>3500</td><td>350</td><td>240</td><td>15000</td></tr>
<tr><td>2.</td><td>அம்மன் ஏஜென்ஸீஸ், 1/3856/1.கோகுல</td><td>30</td><td>645</td><td>1200</td><td>3650</td><td>370</td><td>260</td><td>15700</td></tr>
</table>
</td>
<td>87</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>ம் காலணி,<br>Bikshandar Kovil,<br>1.Tolgate, Trichy-2</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு:
<ol>
<li>மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1-ல் உள்ள மெஸ்ஸர்ஸ்.திருமலை டிரேடர்ஸ் திருச்சி-2 என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.</li>
<li>பொதுசுகாதாரம் நோய் தடுப்பு பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் நலன் கருதி, கிருமி நாசினி பொருட்கள் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
<u>ந.க.எண்.1648/2022/எச்1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>15</td>
<td>இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு சிக்கன் குன்யா காய்ச்சல் நோய்கள் பரவ வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2563/2018/அ5 உஇ (ஊ) நாள் 31.05.2022-ல் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சிப் பகுதிகளில் தற்காலிக மஸ்தூர்கள் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கையாக தமிழக அரசு அறிவித்துள்ளபடி 300 வீடுகளுக்கு 1 மஸ்தூர் வீதம் மக்கள் தொகை மற்றும் வீடுகளின் அடிப்படையில் (19) மஸ்தூர்களை நியமனம் செய்து தினசரி தடுப்பு பணிக்கு, நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை-28 அவர்கள் தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதரியான தொகையினை தூய்மை பணியாளர்களுக்கு வழங்குவதற்கு உத்தரவு வழங்கிட இருப்பதால் தற்போது பணிப்பார்த்து வரும் ஒப்பந்த நிறுவனத்திற்கு அதே விகிதத்தில் ஆகஸ்ட்-2022, செப்டம்பர்-2022 மற்றும் அக்டோபர்-2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து வழங்கிட ஆகும் செலவினத்திற்கு மன்றப்பொருள் அனுமதிக்கு வேண்டடப்படுகிறது.</td>
<td>88</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br><br>**1.** அனுமதிக்கலாம்<br>**2.** நகராட்சிப் பகுதியில் டெங்கு மற்றும் சிக்கன் குன்யா காய்ச்சல் தொற்று நோய்கள் தடுப்பு பணிக்கு ஆகும் செலவு ரூ.8,00,000/- தொகையினை பொதுநிதியில் செய்துகொள்ள அனுமதி வழங்கிடலாம்.<br><br>**(ந.க.எண் 1818/2020/எச்1)** | | |
| **16** | இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணியினை தனியார் பங்களிப்புடன் (Outsourcing) தினசரி 45 பணியாளர்கள் பணிக்கு அனுப்புதல் பணியினை MSG INFRA தஞ்சாவூர் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், மூன்று மாதம் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை-28 அவர்கள் தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதரியான தொகையினை தூய்மை பணியாளர்களுக்கு வழங்கிட இருப்பதால் ஆகஸ்ட்-2022, செப்டம்பர்-2022 மற்றும் அக்டோபர்-2022 ஆகிய மாதங்களுக்கு தற்போது பணிப்பார்த்து வரும் ஒப்பந்த நிறுவனத்திற்கு நீட்டிப்பு செய்து வழங்கிட ஆகும் செலவினத்திற்கு மன்றப்பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்<br><br>**2.** நகராட்சியின் நலன் கருதி நகல் பகுதியினை திடக்கழிவு மேலாண்மை பணியின் மூலம் (Outsourcing) பணி செய்திட ஆகும் செலவினம் பொதுநிதியில் செய்துகொள்ள அனுமதி வழங்கிடலாம்.<br><br>**(ந.க.எண் 1716/2020/எச்1)** | **89** | **அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 17 | நகர்மன்ற தலைவர் அலுவலக அறை மற்றும் நகர்மன்ற தலைவரின் வீட்டிற்கு ஏற்கனவே உள்ள தொபேசி எண்கள் 04369-200100 (அலுவலகம்), 04369-223330 ஆகியவற்றை BSNL நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு அதற்கு மோடத்துடன் கொண்ட இணைப்பு SPVS Communication நிறுவனத்தின் மூலமாக தொலைபேசியுடன் இணைப்பு வழங்கப்பட்டதற்கு, வீட்டிற்கு ரூ.4368/-ம், அலுவலகத்திற்கு ரூ.4368/- ஆக மொத்தம் ரூ.8732/-க்கான பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்டுள்ள தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.** அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br><br>**(ந.க.எண் 1907/2022/சி1)** | **90** | **அனுமதிக்கப் பட்டது** |
| 18 | திருமதி.ஆர்.நளினி க/பெ.எஸ்.ரவிச்சந்திரன். 34.பாளையக்காரத் தெரு, மேல் புவனகிரி (அஞ்சல் (ம) தாலுக்கா) என்பவர் மேன்மைமிகு முன்சீப் கோர்ட், சிதம்பரத்தில் இந்நகராட்சிக்கு எதிராக (வழக்கு எண் 97/2022) வழக்கு தொடுத்துள்ளார். எனவே, இந்நகராட்சி சார்பாக மேற்கண்டுள்ள வழக்கில் ஆஜராக அரசு வழக்கறிஞர் திரு.கே.எஸ்.இளங்கோவன், எம்.ஏ.எம்.பில்.,பி.எல்., முன்சீப் கோர்ட் சிதம்பரம் என்பவர் ரூ.12000/- வழங்க கேட்பு அனுப்பியுள்ளார். எனவே மேற்கண்டுள்ள தொகையினை செலுத்திடவும், மேலும் இவ்வழக்கு தொடர்பாக ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/=க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** | **91** | **அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | 1. அனுமதிக்கலாம்<br>2. அரசு வழக்கறிஞர் திரு.கே.எஸ்.இளங்கோவன், எம்.ஏ.எம்.பில்.,பி.எல்., முன்சீப் கோர்ட் சிதம்பரம் அவர்கள் இந்நகராட்சி சார்பாக ஆஜராகுவதை மன்றம் ஏற்கலாம்<br>3 வழக்கறிஞர் கட்டணம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் 369/2022/சி1)** | | |
| **19** | மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1038/2019/அ4 நாள் 27.07.2022-ல் 75-வது சுதந்திர தின அமுத பெருவிழா 2022 கொண்டாட்டத்தை முன்னிட்டு இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வீடுகளிலும் தேசிய கொடியினை பறக்கவிடும் நிகழ்விற்கு தேவையான 7296 தேசிய கொடிகளை தைத்து வழங்கிட 29.07.2022-க்குள்ளாக மகளிர் திட்டம் திருவாரூர் அவர்களுக்கு ரூ.1,45,920/-ஐ உரிய வங்கி கணக்கில் செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்டுள்ள தொகையினை செலுத்த நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. ரூ.1,45,920/- பொது நிதியில் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் 2018 /2022/இ2)** | **92** | **அனுமதிக்கப் பட்டது** |
| **20** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 வீரன் நகரில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக பாலம் அமைத்திட நமக்கு நாமே திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள திட்ட மதிப்பீடு தொகை ரூ.25.00இலட்சத்தில் 50% பங்குத் தொகை | **93** | **அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | ரூ.12.50இலட்சம் சிட்டி யூனியன் வங்கி காசோலை எண்.267 நாள்.17.05.2022ன்படி செலுத்தி எம்.ஆர்.வி அசோசியேட்ஸ், திருத்துறைப்பூண்டி அவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி கோரி முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் ந.க.எண்.27519-43/2021/பி2 நாள் 16.06.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் மேற்படி பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர், தஞ்சாவூர் அவர்களுக்கு தொழில் நுட்ப அனுமதி கோரி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர், தஞ்சாவூர் அவர்கள் ந.க.எண்.2812/2021/இ1 நாள்.08.07.2022ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளார்கள். எனவே மேற்படி பணிக்கு நமக்கு நாமே திட்டம் 2021-22ன்கீழ் மேற்கொள்ள எம்.ஆர்.வி அசோசியேட்ஸ், திருத்துறைப்பூண்டி, நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.** நமக்கு நாமே திட்டத்தின்கீழ் பெறப்பட்ட நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும்.<br>**3.** அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.2054/2021/இ1 | | |

ஒம்/ பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/